# Evvagai Vakkiyamena Kandueluthutal – எவ்வகை வாக்கியமெனக் கண்டெழுதுதல்

இப்பகுதியில் வரும் வினாக்கள் ஒரு சொற்றொடர் கொடுத்து அது எவ்வகை வாக்கியம் என கண்டறியுமாறு அமைக்கப்படுகிறது. இதற்கு வாக்கிய வகைகளையும் அதன் இலக்கணங்களையும் அறிந்திருக்க வேண்டும்.

## வாக்கியம்

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்றமைந்து பொருள் நிறைவு பெற்றிருக்கும் சொற்றொடர் வாக்கியம் எனப்படும்

### வாக்கிய அமைப்பு-:

பெரும்பாலும் ஒரு வாக்கியத்தில்

- எழுவாய் – முதலிலும்
- பயனிலை – இறுதியிலும்
- செய்யப்படுபொருள் – இடையிலும்

### எழுவாய்-:

அறுவகைப் பெயர்ச்சொல்களும் , வினையாலணையும் பெயரும் எழுவாயாக வரும்.

### பயனிலை-:

வினைமுற்று (தெரிநிலை , குறிப்பு) பெயர்ச்சொல் , வினாப் பெயர் ஆகியன பயனிலையாக வரும்.

## வாக்கிய வகைகள்

### 1. தனி வாக்கியம்-:

ஒரு எழுவாயோ, ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்களோ வந்து ஒரு பயனிலையைக் கொண்டு முடிவது தனிவாக்கியம் ஆகும்.

எழுவாய் செயப்படுபொருள் இன்றியும் வாக்கியம் அமைவது உண்டு.


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

எ.கா.

- பாரதிதாசன் தமிழ் உணர்வை வளர்த்தார்
  (ஒரு எழுவாய் ஒரே) (பயனிலை(
- சேர, சோழ, பாண்டியரகள் மூவரும் தமிழை வளர்த்தனர்
  (மூன்று எழுவாய்(ஒரே பயனிலை) (

எழுவாய் இன்றி

எ.கா.

- வைகறைக் துயிலெழு
  (செயப்படுபொருள்(பயனிலை) (

செயப்படுபொருள் இன்றி

பாவை வந்தாள்

எ.கா.

- முகில் வண்ணன் திருக்குறள் கற்றான்.
- அமுதன் எழுதுகிறான்.
- பூ விழியும், சக்தியும் பழனி சென்றனர்.

2. தொடர் வாக்கியம்-:

தனிவாக்கியங்கள் பல தொடரந்து வருவதும் ஒரே எழுவாய் பல பயனிலைகளை பெற்று வருவதும் தொடர் வாக்கியமாகும்.

எ.கா.

- பெண்ணுக்கும் மதிப்பு கொடுங்கள் வணக்கம் . உரிமை கொடுங்கள் . .செலுத்துங்கள்

3. கலவை வாக்கியம்-:

ஒரு முதன்மை வாக்கியமும் அதனோடு ஒன்றோ பலவோ பொருள் தொடர்புள்ள சார்பு வாக்கியங்களும் சேர்ந்து வருவது கலவை வாக்கியம் எனப்படும்.


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

எ.கா.

- திருவள்ளுவர், ஒவ்வொருவருக்கும் ஒழுக்கத்தை உயிரினும் மேலாக ஓம்ப வேண்டும் என்று கூறியுள்ளார்.

### 4. செய்தி வாக்கியம்-:

ஒரு செய்தியைத் தெளிவாகத் தெரிவிக்கும் வாக்கியம் செய்தி வாக்கியம் எனப்படும்

எ.கா.

- திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.

### 5. செய்தி வாக்கியம்-:

வினாப்பொருள் தரும் வாக்கியம் வினா வாக்கியம் ஆகும்.

எ.கா.

- தாயின் கடமை என்ன?'

### 6. விழைவு வாக்கியம்-:

கட்டளை, வேண்டுகோள், வாழ்தல், வைதல் ஆகியவற்றுள் ஒன்றைத் தெரிவிக்கும் வாக்கியம்

எ.கா.

- தமிழ்பாடத்தை முறையாகப் படி (கட்டளை)
- நல்ல கருத்துக்களை நாளும் கேட்க (கட்டளை)
- வையத்துள் வாழ்வாங்கு வாழ்க (வாழ்த்துதல்)
- தீயன ஒழிக (வைதல்)

### 7. உணர்ச்சி வாக்கியம்-:

உவகை, அவலம், அச்சம், வியப்பு முதலான உணர்ச்சிகளை உணர்த்தும் வாக்கியம்


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

எ.கா.

- ஆதமிழ் மக்கள் அனைவரும் ஏழுத்தறிவு பெற்றனரா !? (உவகை(
- அந்தோ தமிழ் கடைத்தெருக்களில் அறிவுப்புகள் கூட நல்ல தமிழில் ! (அவலம்) !இல்லையே
- ஐயோ(அச்சம்) அப்பா அடிப்பாரா !
- என்னே தமிழின் !இனிமை(வியப்பு) !

8. உடன்பாட்டு வாக்கியம்-:

செயல் அல்லது தொழில் நிகழ்வதை தெரிவிப்பது உடன்பாட்டு வாக்கியம் எனப்படும்.

எ.கா.

- வயலில் நேற்று மாடுகள் மேய்ந்தன.

9. எதிர்மறை வாக்கியம்-:

செயல் அல்லது தொழில் நிகழாமையைத் தெரிவிப்பது

எ.கா.

- வயலில் நேற்று மாடுகள் மேய்ந்தில

10. நேர்கூற்று வாக்கியம்-:

ஒருவர் கூறியதை அவர் கூறிபடியே கூறுவது நேர் கூற்று ஆகும்.

இந்நேர்க்கூற்று தன்னிலை, முன்னிலை இடங்களில் வரும்.

எ.கா.

- “தாய் மகளைப் பார்த்து மணி அடித்து விட்டது பள்ளிக்கு உடனே செல் .” என்றார்.

11. அயர்கூற்று வாக்கியம்-:

ஒருவர் கூறியதை அப்படியே கூறாமல் அயலார் கூறவது போல கூறவது அயற்கூற்று.


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

தன்னிலை, முன்னிலை இடங்களில் வரும் எழுவாயைப் படர்க்கையில் அமைத்து கூற வேண்டும்.

எ.கா.

- தாய் மகளிடம் , மணி அடித்து விட்டதால் பள்ளிக்கு உடனே செல்லும்படி சொன்னாள்.

(நேர் கூற்றை அயற்கூற்றாக மாற்றும் போது பின்வரும் சொற்கள் மாறுதல் அடையும்)

| நேர்க்கூற்று | அயற்கூற்று |
|---|---|
| இது, இவை | அது, அவை |
| இன்று | அன்று |
| இப்பொழுது | அப்பொழுது |
| இதனால் | அதனால் |
| நாளை | மறுநாள் |
| நேற்று | முன்னாள் |
| நான், நாம், நாங்கள் | தான், தாம், தாங்கள் |
| நீ | அவன், அவள் |
| நீங்கள் | அவர்கள் |

### நேர்கூற்றை அயற்கூற்றாக்கல்

- அழகுச்சிலை தான் மறுநாள் வருவதாகக் கூறினாள்.
- ஆசிரியர் அன்று வந்து காணுமாறு கூறியதால் தான் செல்கிறேன் நீயும் வா . .என்று இளங்கோ கதிரவனிடம் கூறியுள்ளான்


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- அவன் தன் மொழியை உயர்த்தினால் தான் உன் நாடு உயரும் அறிவும் . உயரும் என்பதாக பாரதிதாசன்கூறியுள்ளார்.
- மேலாளர் மறுநாள் காலையில் வா உனக்குத் தரவேண்டிய தொகைத் . .தருவதாக கூறியுள்ளார்
- ஆசிரியர் மாணவரிடம் உன்னிடம் திறமையும் ஆற்றலும் இருக்கிறது . .உழைத்தால் முன்னேறுவாய் என்பதாக கூறியுள்ளார்

நேர்கூற்றை அயற்கூற்றாக்கல்

- போட்டியில் நான் முதல் பரிசு பெற்றுள்ளேன் என ஆசிரியர் கூறினார்.
- தன் தாயராரிடம் அன்பரசி மல்லிகை மலர் வாங்கி வரக் கூறினாள்.

www.tnpscgroup4


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in